Journal of Valartamil, eISSN 2716-5507,
Volume 3 No.2 2022 (23-33)

# செயல்திறன் மிக்க வாசிப்பு அணுகுமுறைகளின் வழி வாசிப்புத் திறனை மேம்படுத்துதல்

## Improving reading skills through effective reading strategies

**Yuvaaneswaran Kaliappan**[1]
Faculty of Language and Communication,
Sultan Idris Educational University, Tanjong Malim, Perak, MALAYSIA
D089917@siswa.upsi.edu.my

**Subramaniam Kolandan**[2]
Faculty of Management and Economics,
Sultan Idris Educational University, Tanjong Malim, Perak, MALAYSIA
subramaniam@fpe.upsi.edu.my

**Selvaraj R** [3]
Government Arts and Science College,
Coimbatore, INDIA
selvarajarts1979@gmail.com

**To cite this article (APA):** Kaliappan, Y., Kolandan, S., & Selvaraj, R. (2022). செயல்திறன் மிக்க வாசிப்பு அணுகுமுறைகளின் வழி வாசிப்புத் திறனை மேம்படுத்துதல்: Improving reading skills through effective reading strategies. *Journal of Valartamil*, *3*(2), 23–33. https://doi.org/10.37134/jvt.vol3.2.3.2022

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol3.2.3.2022

**Abstract:** The study was carried out under the theme of Improving Reading Competence Through Active Reading Approaches. The purpose of this study is to investigate effective strategies used by teachers to improve students' reading ability and to find effective reading strategies that students can easily understand. This study has been conducted qualitatively. An interview was conducted with the teacher about the approaches used by Tamil teachers to improve reading skills through effective reading approaches among students and the top 3 approaches were discussed. The approaches which are easiest for them are chosen by the students. Reading this study suggest that active reading approaches can improve students' reading skills.

**Keywords:** Improving, reading skills, Reading strategies

**ஆய்வுச் சுருக்கம்:** செயல்திறன் மிக்க வாசிப்பு அணுகுமுறைகளின் வழி வாசிப்புத் திறனை மேம்படுத்துதல் என்ற தலைப்பைக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. மாணவர்களின் வாசிப்பு திறனை மேம்படுத்த ஆசிரியர்கள் கையாளும் செயல்திறன் மிக்க அனுகுமுறைகள் ஆராய்தல் மற்றும் மாணவர்கள் எளிதாக புரிந்து கொள்ளும் செயல்திறன் மிக்க வாசிப்பு அனுகுமுறைகளை கண்டறிதல் இவ்வாய்வின் நோக்கமாகக் கருதப்படுகிறது. இந்த ஆய்வு பண்புசார் முறையில் கையாளப்பட்டுள்ளது. மாணவர்களிடையே செயல்திறன் மிக்க வாசிப்பு அணுகுமுறைகளின் வழி வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்கு தமிழ் ஆசிரியர்கள் கையாளும்

அணுகுமுறைகளைப் பற்றி ஆசிரியரிடம் ஒரு நேர்காணல் செய்யப்பட்டு சிறந்த 3 அணுகுமுறைகள் கையாளப்பட்டது. அதில் தங்களுக்கு எளிதான அணுகுமுறைகள் மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த ஆய்வை வாசிப்பதன் மூலம் செயல்திறன் மிக்க வாசிப்பு அணுகுமுறையின் வழி மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தலாம் என்ற கருத்தை அறிய முடிகிறது.

**கெய்சார்ட்டஸ்:** மேம்படுத்துதல், படிக்கும் திறன், வாசிப்பு உத்திகள்

## முன்னுரை

வாசிப்பு என்பது கல்வியின் அடிப்படைத் திறன்களான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய முக்கியத் திறன்களின் ஒன்றாகத் திகழ்கின்றது. ஆனால், இன்றையக் காலக்கட்டத்தில் பள்ளிகளில் மற்ற திறன்களைக் காட்டிலும் வாசிப்புத் திறன்களில் தொடக்கப்பள்ளியாகட்டும் இடைநிலைப்பள்ளியாகட்டும் மாணவர்களிடத்தில் பல சிக்கல்கள் காணப்படுகின்றது எனலாம். இதற்கு, முதன்மை காரணம் கற்றல் கற்பித்தல் அணுமுறைகள் மாணவர்களுக்கு ஆர்வத்தைத்தை ஏற்படுத்தும் வகையில் இல்லாமல் இருப்பதே எனலாம். ஆகையால், கற்றல் கற்பித்தலில் புதிய அணுமுறைகளைக் கையால்வது காலத்தின் கட்டயமாகும். இதனைக் கருத்தில் கொண்டே, மாணவர்களிடையே வாசிப்புத் திறனை மேம்படுத்துவதில் செயல்திறன் மிக்க அனுகுமுறைகளின் பங்கினைக் கண்டறிய இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

## ஆய்வுப் பின்னணி

ஆரம்ப பள்ளி முடிந்து இடைநிலைப்பள்ளி செல்லும் மாணவர்கள் வாசிப்புத் திறனில் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். அதுவும் நமது மாணவர்களிடையே இந்நிலை பரவலாகக் காணப்படுகிறது. நம் தமிழ் மாணவர்கள் தமிழ்மொழியைச் சரளமாக வாசிப்பதில் பின் தங்கிய நிலையில் உள்ளனர். அதாவது, இன்றைய இடைநிலைப்பள்ளி மாணவர்களிடையே வாசிக்கும் பழக்கம் மிகவும் கவலைகிடமாகவே இருக்கின்றது. இதனால், இன்றைய இடைநிலைப்பள்ளி மாணவர்களிடையே தமிழ்மொழியை வாசித்து உய்த்துணரும் திறனையும் கைவர பெறுவதிலிருந்து தவறுகின்றனர் (சீதா லட்சுமி, 2010). எனவே, வாசிப்புத் திறனை மேம்படுத்துவதில் பல அணுகுமுறைகளைக் கருவியாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

## ஆய்வு சிக்கல்

இன்றையக் காலச் சூழலில் இடைநிலைப்பள்ளிகளில் வாசிப்பிற்கு என்று எடுத்துக்கொண்டால் ஆசிரியர்கள் அதிகமான அணுமுறைகளைக் கையாளுவதில்லை அதிலும் இந்த ஊரடங்கு காலத்தில் பள்ளிகள் மூடப்பட்டு ஏற்கெனவே ஆசிரியர்கள் அனுகி வந்த அனுகுமுறைகளும் கையாளப்படுவதில்லை என்பதை இவ்வாய்வின் நேர்காணல் வழி தெரிய வந்தது. மேலும், இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்மொழி பாடம் ஒரு வாரத்திற்கு மூன்று மணி நேரம் மட்டுமே கற்பிக்கப்படுகின்றன. இந்நிலையில் ஆசிரியர்களால் மாணவர்களின் மீது அதிக கவனம் செலுத்தவும் வாய்ப்பில்லாமல் போகின்றது. இதனால், தமிழ்மொழியின் அடிப்படை திறன்களான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய இந்நான்கு திறன்களையும் மாணவர்களிடத்தில் கொண்டு சேர்ப்பது கேள்விக்குறியே. இதனிலும், வாசிப்பிற்கு ஆசிரியர்களால் முழுகவனம் செலுத்துவது இயலாத ஒரு காரியமாகவே அமைகின்றது. இதனையடுத்து, இன்றைய மாணவர்கள் வாசிக்கும் போது பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். ஆக அச்சிக்கலை களைய செயல்திறன்மிக்க வாசிப்பு அணுகுமுறைகளை இவ்வாய்வில் கண்டறியபட்டுள்ளது. ஆய்வு வினா, மாணவர்களின் வாசிப்பு திறனை மேம்படுத்த ஆசிரியர்கள் கையாளும் செயல்திறன் மிக்க அனுகுமுறைகள் யாவை? இரண்டாவது வினா, மாணவர்கள் எளிதாக புரிந்து கொள்ளும் செயல்திறன் மிக்க வாசிப்பு அனுகுமுறை யாவை?

## ஆய்வு நோக்கம்

I. மாணவர்களின் வாசிப்பு திறனை மேம்படுத்த ஆசிரியர்கள் கையாளும் செயல்திறன் மிக்க அனுகுமுறைகள் ஆராய்தல்.

II. மாணவர்கள் எளிதாக புரிந்து கொள்ளும் செயல்திறன் மிக்க வாசிப்பு அனுகுமுறைகளை கண்டறிதல்.

## முந்தைய ஆய்வுகள்

இந்த ஆய்வின் முடிவில் நுண்ணிய வாசிப்பின் வழி கட்டுரை எழுதும் திறனை வளம்படுத்த முடியும் என்பது அறியப்பட்டுள்ளது. ஆகவே, ஆய்வின் முடிவில் பல உத்திமுறைகளைக் கையாண்டு மாணவர்களை ஈர்க்கும் வகையிலான கற்றல் கற்பித்தலை ஆசிரியர் மேற்கொண்டால் அவர்களின் திறன்கள் மேம்படும் என்று இவ்வாய்வில் வழியுறுத்தப்பட்டுள்ளது. அடுத்த ஆய்வாக, Khairul Anwar என்பவரால் The Effect of Collaborative Strategic Reading toward Students Reading Skill எனும் தலைப்பில் ஆய்வு ஒன்று ஆராயப்பட்டுள்ளது. சஞ்சிகையின் வழி மாணவர்களின் வாசிப்புத் திறன் மேம்படுத்த முடியும்

என்று இந்த ஆய்வின் முடிவுகள் உறுதிப்படுத்துகின்றன. எனவே, குறியீடுகளின் வழி ஆய்வாளர் இவ்வாய்வினை மேற்கொண்டுள்ளார். மேலும், 'Hulya kuchugolu' என்பவரால் Improving reading skills through effective reading strategies மாணவர்களிடையே வாசிப்பு உத்திகளைப் பற்றிய சிந்தனை இல்லாமல் இருப்பதையும் அதற்கான தீர்வாக வாசிப்பு அனுகுமுறைகளை இவ்வாய்வு காண்பித்துள்ளது. ஆய்வின் முடிவில் மாணவர்கள் வாசிப்பு அனுகுமுறைகளைப் பற்றி நன்கு புரிந்து கொண்டனர் வாசிப்பில் அவர்களின் புரிதல்களும் மேம்பட்டதை இவ்வாய்வு வழியுறுத்துகிறது.


## ஆய்வு வடிவமைப்பு

ஆய்வு வடிவமைப்பானது ஓர் ஆய்வுக்குத் திட்டமிடலாகவும் அதனை வழி நடத்தும் வழிகாட்டியாகவும் அறியப்படுகிறது. இந்த ஆய்வில் மீட்டுணர்தல், திட்டமிடுதல், செயல்படுத்துதல், உற்றுநோக்குதல் ஆகிய சுழற்சிகளைப் பின்பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலில், மாணவர்கள் தங்களுக்கு எளிதாக புரிந்து கொள்ளும் செயல்திறன்மிக்க வாசிப்பு அணுகுமுறைகளை மீட்டுணரப்பட்டது. பின், திட்டமிடப்பட்ட நடவடிக்கையும் செயல்படுத்தப்பட்டன. இறுதியாக, செயல்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் விளைப்பயன் உற்றுநோக்கப்பட்டது. இந்த ஆய்வில் செயல்மிக்க வாசிப்புத் திறன் பற்றிய தகவல்களை கண்டறிய ஆசிரியர் மற்றும் மாணவர்களிடம் நேர்காணல் செய்யப்பட்டது. மேலும் இந்த ஆய்வில் பண்புசார் முறை கையாளப்பட்டுள்ளது. மாணவர்களிடையே வாசிக்கும் திறனை மேம்படுத்த எந்த செயல் திறன் மிக்க அனுகுமுறை கையாளப்படுகிறது என்று ஆசிரியர் கொடுத்த நேர்காணல் வழி அரியப்பட்டது. நேர்காணலின் வழி கிடைக்கப்பட்ட முக்கிய செயல்திறன் மிக்க அணுகுமுறைகள் அட்டவணையில் விளக்கப்பட்டது. பின் எந்த செயல் திறன் வாசிப்பு திறன் மாணாவர்களுக்கு எளிதாகவும் வாசிப்புத் திறனை மேம்படுத்துகிறது என்று பண்புசார் முறையில் கையாளாப்பட்டுள்ளது.

## ஆய்வுக் கோட்பாடு

புளூமின் வகைபிரித்தல் என்பது அறிவாற்றல் திறன்களுக்கான கற்றல் திறன்களுக்கான ஒரு வகைப்படுத்தல் முறையாகும். ஆசிரியர்கள் பாடங்களை நடத்த இந்த வகைபிரிப்பை பயன்படுத்துகின்றனர். 1956 ஆம் ஆண்டில், கல்வி உளவியலாளர் பெஞ்சமின் ப்ளூம், கற்றல் தேவைப்படும் அறிவாற்றல் திறன்களை ஒரு வகைபிரித்தார். இந்த வகைப்பாடு பெரும்பாலும் ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பிரமிடுகளால் குறிக்கப்படுகிறது. அவை அறிவு, புரிதல், பயன்பாடு, பகுப்பாய்வு, தொகுப்பு மற்றும் மதிப்பீடு ஆகும்.

## ஆய்வுக் கோட்பாடு வரைப்படம்




## ஆய்வுக் கருவிகள்

இந்த ஆய்வில் நேர்காணல் கேள்வித்தாள்கள் ஆய்வுக் கருவிகளாகப் பயன்படுத்தி இந்த ஆய்விற்கான தரவுகள் சேகரிக்கப்பட்டன. இதுவே இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்ட கருவிகள்.


## ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோர்

ஆய்விற்கு உட்பட்டோர் கெடா மாநிலத்தில் லூனாஸ் வட்டாரத்தில் உள்ள ஓர் இடைநிலைப்பள்ளி மாணவர்களிடத்தில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் 10 மாணவர்களும் ஓர் ஆசிரியரும் ஆய்வு மாதிரிகளாக பங்கேற்றனர். இந்த 10 மாணவர்களைக் கொண்டுதான் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் ஐந்து ஆண், ஐந்து பெண் மாணவர்கள் ஆவர்.

## தரவுகள் திரட்டும் முறை

ஆய்வு தொடர்பான தகவல்களை சேகரிக்க கேள்வித்தாள், நேர்காணல் போன்ற கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்களிடையே செயல்திறன் மிக்க வாசிப்பு அணுகுமுறைகளின் வழி வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்கு தமிழ் ஆசிரியர்கள் கையாளும் அணுகுமுறைகளைப் பற்றி ஆசிரியரிடம் ஒரு நேர்காணல் செய்யப்பட்டது. அவ்வகையில் முக்கிய மூன்று செயல்திறன்மிக்க வாசிப்பு அனுகுமுறைகள் நேர்காணல்வழி கண்டறியப்பட்டன. இவ்வாய்வில் மாணவர்கள் எளிதாக புரிந்து கொள்ளும் செயல் திறன் மிக்க வாசிப்பு அனுகுமுறைகளை கண்டறிய உற்று நோக்கல் நடவடிக்கையை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு கட்டுரை புத்தகம் இந்த நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் அந்த கட்டுரையை மூன்று முக்கிய வாசிப்பு அனுகுமுறையைப் பயன்படுத்தி வாசித்தார்கள். அதனைத் தொடர்ந்து எந்த செயல் திறன் மிக்க வாசிப்பு அனுகுமுறை மாணவர்களுக்கு எளிதாகவும் மற்றும் வாசிப்புத் திறனை மேம்படுத்தவும் உதவுகிறது என்பதனை ஆராயப்பட்டது.

**தரவுகள் பகுப்பாயும் முறை**




வரைப்படம் 1

மேற்காணும் வரைபடம் 1, கோட்பாட்டிற்கு இணங்க தரவு பகுப்பாய்வு முறை விளக்கப்பட்டுள்ளது. முதலாவதாக, செயல்திறன் மிக்க வாசிப்பு அணுகுமுறையைக் கண்டறிதல் (investigate). தொடர்ந்து, தமிழ் ஆசிரியரிடம் நேர்காணல் வழி முக்கிய 3 செயல்திறன் மிக்க வாசிப்பு அனுகுறைகளை அறிதல் (select). பின்னர், அந்த முக்கிய 3 செயல்திறன் மிக்க வாசிப்பு அனுகுமுறைகளை ஆராய்தல் (experiment). தொடர்ந்து, மாணவர்களிடையே 3 செயல்திறன் மிக்க வாசிப்பு திறனை செயல்படுத்துதல் (execute). மேலும், மாணவர்களிடையே எந்த செயல்திறன் மிக்க வாசிப்பு அணுகுமுறை எளிதாக புரியக்கூடியவை என்பதனை நடவடிக்கை மூலம் கண்டறியப்படுதல் (identify). இறுதியாக, மாணவர்களிடையே எளிதாக புரிந்து கொள்ளும் செயல்திறன் மிக்க வாசிப்பு அணுகுமுறையைக் கண்டறிதல் (state).

## ஆய்வு முடிவுகள்

ஆசிரியரை நேர்காணல் செய்தன் வழி முக்கிய மூன்று செயல் திறன் மிக்க வாசிப்பு அனுகுமுறைகளை கண்டறியப்பட்டுள்ளது. அவை அட்டவணை மூலம் பகுப்பாயப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **காட்சி படுத்துதல் (visual)** | ஒரு உரையைப் புரிந்துகொள்ளும்போது மாணவர்கள் பயன்படுத்தும் மற்றொரு உத்தி காட்சிப்படுத்தல் ஆகும் (அட்லர், 2001). காட்சிப்படுத்தல் என்பது மாணவர்கள் வாசிக்கப்பட்ட ஒரு படத்தை மனதில் காட்சியாக உருவாக்க வேண்டும். இந்த படம் வாசகரின் நினைவகத்தில் வாசகரின் உரையின் விளக்கத்தின் பிரதிநிதித்துவமாக சேமிக்கப்படுகிறது (தேசிய வாசிப்பு குழு, 2000). ஆசிரியர்கள் ஒரு கதையில் அமைப்புகள், கதாபாத்திரங்கள் மற்றும் செயல்களைக் காட்சிப்படுத்த மாணவர்களை ஊக்குவிக்கலாம். மேலும் உரையை காட்சிப்படுத்திய பின்னர் வரைபடங்களை உருவாக்க அல்லது அவர்களின் மனதில் வரும் படத்தைப் பற்றி எழுதும்படி கேட்கலாம். |
| **சுருக்கமாக்குதல் (summarize)** | செயல்முறைக்கு மாணவர்கள் படிக்கும்போது என்ன முக்கியம் என்பதைத் தீர்மானிக்க வேண்டும் மற்றும் மாணவர்கள் தகவல்களைச் சுருக்கிக் கொள்ள வேண்டும் (அட்லர், 2001). சுருக்கமான செயல்பாட்டின் போது, மாணவர்கள் முக்கிய கருத்துகள் துணை கருத்துகளிலிருந்து வேறுபடுத்தி அறிய முடியும். இது மாணவர்களுக்கு |


| | |
|---|---|
| | "உரை புரிதலை மேம்படுத்துவதற்கான திறனை வளர்க்க உதவும். சுருக்கமாகச் சொல்வது ஒரு மூல அணுகுமுறையாகும், இது நீண்ட வாசிப்பு பத்திகளில் கூட கருத்துகளை ஒழுங்கமைக்க மாணவர்களுக்கு உதவும். |
| **கேள்வி கேட்பது அல்லது கருத்துணர்தல் (Question)** | வாசிப்பதற்கு முன், வாசிக்கும் போதும், மற்றும் வாசித்த பின்னும் கேள்வி கேட்கலாம். கேள்விக்குரிய செயல்முறையானது, மாணவர்கள் தங்களைத் தாங்களே கேள்விகளைக் கேட்க வேண்டும், அர்த்தத்தை உருவாக்குதல், புரிதலை மேம்படுத்துதல், பதில்களைக் கண்டறிதல், சிக்கல்களைத் தீர்ப்பது, தகவல்களைக் கண்டுபிடிப்பது மற்றும் புதிய தகவல்களைக் கண்டுபிடிப்பது என்பதாகும். (ஹார்வி & ட்விஸ், 2000). இதில் வாசிப்புக்கு முன்னும் பின்னும், ஆசிரியர் கேட்ட கேள்விகளுக்கான பதில்களைக் கண்டுபிடிப்பதற்காக மாணவர்கள் வாசிப்பு செயல்முறை முழுவதும் உரைக்குத் திரும்புகிறார்கள். இதன் மூலம், மாணவர்கள் கேள்விகளை வேறுபடுத்திப் பார்க்க பயிற்சி செய்கிறார்கள். |

| அணுகுமுறைகள் / மாணவர்கள் | காட்சி படுத்துதல் | சுருக்கமாக்குதல் | கருத்துணர்தல் |
|---|---|---|---|
| 1 | / | | |
| 2 | | / | |
| 3 | / | | |
| 4 | / | | / |
| 5 | | | |
| 6 | / | | |
| 7 | | / | |
| 8 | / | | |
| 9 | / | | |
| 10 | | | / |
| மொத்தம் | 6 | 2 | 2 |

**அட்டவணை 1**

மொத்தம் 10 மாணவர்களிடத்தில் முக்கிய மூன்று செயல்திறன்மிக்க வாசிப்பு அனுகுமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டது. அதில் எந்த வாசிப்பு அணுகுமுறை அவர்களுக்கு எளிதான அனுகுமுறையாக அமைந்தது என்பதை அவர்களே தேர்ந்தெடுத்தனர். அவ்விவரத்தை மேலே கொடுக்கப்பட்ட அட்டவணையின் மூலம் காண முடிகிறது. 10 மாணவர்களில் 6 மாணவர்கள் தங்களுக்கு காட்சி படுத்துதல் அணுகுமுறையையும், 2 மாணவர்கள் சுருக்கமாக்குதல் அணுகுமுறையையும், 2 மாணவர்கள் கருத்துணர்தல் அணுகுமுறையையும் தேர்ந்தெடுத்துள்ளனர்.

**ஆய்வு கலந்துரையாடல்**




மேலே கொடுக்கப்பட்ட விளக்கப்படத்தின் வழி மாணவர்கள் தேர்தெடுத்த செயல்திறன் மிக்க வாசிப்பு அணுகுமுறைகளை காண முடிகிறது. கருத்துணர்தல் அனுகுமுறையை 20% மாணவர்களும், சுருக்கமாக்குதல் அணுகுமுறையை 20% மாணவர்களும், காட்சிப்படுத்துதல் அணுமுறையை 60% மாணவர்களும் தேர்ந்தெடுத்துள்ளனர் இதன் வழி காட்சிப்படுத்துதல் எனும் அனுகுமுறையையே அதிகம் மாணவர்கள் விரும்புவதாகவும் எளிதாகப் புரிந்துக் கொள்ளும் அணுகுமுறையாகவும் கருதப்படுகிறது.

**ஆய்வுப் பரிந்துரைகள்**

இந்த ஆய்வினை மற்ற பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களும் தங்களுடைய கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் மேற்கொண்டால் மாணவர்களிடத்தில் வாசிக்கும் திறன் அதிகரிக்கும். மேலும், இந்த அணுகுமுறையைக் கொண்டு மாணவர்களின் கற்பனைத் திறனை மேம்படுத்தலாம். செயல்திறன் மிக்க வாசிப்பு அனுகுமுறையின் வழி மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தலாம் என்ற தலைப்பில் வேறொரு புதிய ஆய்வினை மேற்கொள்ளலாம். இந்த ஆய்வானது பத்து மாணவர்களைக் கொண்டு நடத்தப்பட்டுள்ளது. இனிவரும் தொடர் ஆய்வுகளில் அதிகமான மாணவர்களை உட்படுத்தி ஆய்வினை மேற்கொள்ளலாம். இதன்வழி, வாசிப்புத் திறன் குன்றி இருக்கும் அதிகமான மாணவர்கள் மேம்படுத்தப்படுவர். தொடர் ஆய்வுகளில், அனைத்துப் படிவ மாணவர்களையும் உட்படுத்தி ஆய்வினை மேற்கொள்ளலாம். இந்த ஆய்வில்

3 செயல்திறன் மிக்க வாசிப்பு அணுகுமுறைகளைக் கையாண்டு ஆய்வாளர் ஆய்வினை மேற்கொண்டுள்ளார். தொடர் ஆய்வுகளில் வேறொரு அணுகுமுறைகளைக் கொண்டு ஆய்வினை மேற்கொள்ளலாம்.

## துணைநூற்பட்டியல்

Armstrong, P. (2010). Bloom's Taxonomy. Vanderbilt University Center for Teaching. Retrieved from https://cft.vanderbilt.edu/guides-sub-pages/blooms-taxonomy/.

Almutairi & Nouf Rashdan. (2018). *"Effective Reading Strategies for increasing the Reading Comprehension Level of Third - Grade Students with Learning Disabilities"*'. Dissertations, https://scholarworks.wmich.edu/dissertations/3247

Jitendra,A.& Gajria,M.(2011). *Reading comprehension instruction for students with Learning disabilities. Focus on Exceptional Children*, 43 (8),1-16. Retrieved from http://www.proquest.com

Hulya Kucukoglu, (2012). *Improving reading skills through effective reading strategies,* Akdeniz Language Studies Conference 2012, Hacettepe University, Turkey.

Kementerian Pelajaran Malaysia. (2017). *Dokumen Standard Sekolah Menengah Bahasa Tamil Tngkarani 1*. Balagian Peimbangunan Kurikulum: Kuala Lumpur.

Mahendran, M. & Kalyani, V. (2018). *Motivating ESL Learners of Low Proficiency In eading Through An Extensive Reading Programme*. Muallim Journal of Social Sciences and | Humanities, 2 (3) (177-184.) Retrieved from https://misshonline.com/index.php/journal/article/view/61/56

Jamil Halimah. (November,2017*Comparison of Oral Assessment Aspects of KBSM Descriptors with Learning Standards in Secondary Curriculum Standards* (KSSM). International Journal of Education and Training: Universiti Putra Malaysia.

Rathneswary. R. (2020) *இடைநிலைப்பள்ளித் தமிழாசிரியர்களின் கற்றல் நுண்ணாய்வுச் சிந்தனைத்திறன்.* Muallim Journal of Social Sciences and | Humanities (4) (113-125) Retrieved from https://www.mjsshonline.com/index.php/journal/article/download/210/145

Scetha Lakshimi. (2010). *Teaching Tamil language interesting (தமிழ் மொழி கற்றல் கற்பித்தலைச் சுவை மிக்கதாக்குவோம்).* Pasumpon Publication, Singapore

Hande, Adeep, et al. "Hope speech detection in under-resourced kannada language." arXiv preprint arXiv:2108.04616 (2021).

Thamburaj, Kingston Pal. "E-Teaching in Teacher Education—A Conceptual Framework of Sultan Idris Education University." Sino-US English Teaching 18.5 (2021): 107-111.